*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 521- 525, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

RESEARCH ARTICLE

# சோழர்கால அணிகலன்கள் - ஓர் ஆய்வு

**மு. சத்தியா[1] த. கவிதா[2] ரா.திவ்யா[3]**

*[1,2,3]இளங்கலை வரலாறு - இரண்டாமாண்டு , எம் வி முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்*

**ஆய்வுச் சுருக்கம்**

கோயில்கள் என்பவை அரண்மனையைவிடப் புகழ்பெற்ற அரண்மனைகள் அரசர்களுக்கு அரண்மனையில் செய்யப்பெற்ற மரியாதைகள் (ராஜோபசாரங்கள்), கோயில்களில் கடவுள்களுக்குச் செய்யப்பட்டன. குடிமக்கள், தங்கள் அரசர்களையே முன் மாதிரியாகக் கொண்டு அன்றாட வாழ்வில் அரசர்களுடைய பழக்க வழக்க ஒழுக்கங்களையும் நடையுடை பாவனை முதலியவற்றையும் பின்பற்ற முயன்றார்கள். மற்ற கோயில்களை விடத் தஞ்சாவூர்க் கோயில், அளவில் பெரியது. அதில் எஞ்சியுள்ளவை இதைத் தெரிவிக்கின்றன. எனவே, நகைகளாய் இருந்த செல்வத்தின் மதிப்பையும் பொற்கொல்லர் வணிகம் வளமுடன் திகழ்ந்ததையும், மிகைபடர் கூறப்பட்டிருப்பதைக் கருதாமல், நாம் அப்படியே ஒப்புக் கொள்ளலாம். சோழ வம்சத்தினர் பயன்படுத்திய ஆபரணங்கள் மற்றும் அதனுடைய வேலைப்பாடு மிகுந்த கலைத்திறனையும் பார்க்கும் போது அவர்களுடைய வாழ்வியல் நிலை மேலோங்கி இருந்ததை அறிய முடிகிறது.

**முன்னுரை**

சோழவம்சம் என்பது தென்னிந்தியாவிலிருந்த ஒரு தமிழ் வம்சமாகும். சோழர் காலத்தில் ஆண்களும், பெண்களும் பல்வகை ஆபரணங்களை அணிந்தனர். அதில் முத்து, பவளம், மரகதம் போன்றவற்றில அதிகமான ஆபரணங்கள் செய்தனர். அவர்கள் அணிந்த கழுத்தணிகளில் குறிப்பிடத்தக்கவை. பாசிமாலை, தாலிமணிவடம், மாணிக்க உமுத்து, வயிர உமுத்து போன்றவையாகும். தலையில் திருக்கவம், சுட்டி, திருமுடி, வருகுாளி போன்ற காதணிகளைக் கொண்டிருந்தனர். அவர்கள் கைகளில் முத்து, வளையம், மோதிரம் அணிந்தனர். ஒட்டியாணம் அணிவது செல்வந்தர்களிடையே முக்கியப் பழக்கமாக இருந்தது.

சங்க காலத்தில் பல வகைப்பட்ட ஆபரணங்கள் செய்து பயன்படுத்தப்பட்டன. மக்களின் சமூக பொருளாதார அந்தஸ்தின் அடிப்படையில் ஆபரணங்கள் மாறுபட்டன. தலையில் தொயாகம் என்னும் நகையை அணிந்தனர். புலகம், மகரப்பக்குவாய், வயன்தகம், வலம்புரி ஆகிய தலையில் அணியும் ஆபரணங்கள் உண்டு. பெண்கள் காதுகுத்தித் தங்கத்தால் செய்யப்பட்ட பூங்குழை என்னும் நகை

அணிந்திருந்தனர். வெள்ளியாலான காது அணிகளை அணிவதுமுண்டு, காது வளையல்களில் முத்து, மணி, ஆகியவை பதிக்கப்பட்டிருந்தன. விறலியர் நெற்றியில் அணிகலன் ஒன்றை அணிந்து கொண்டனர். கழுத்து அணிகளை மிகவும் ஆர்வத்துடன் அணிந்தனர். வாடாமாலை என்னும் பெயர் கொண்ட மாலை செல்வந்தப் பெண்களின் அணிகலனை திருமணத்தின் போது அணியப் பெற்ற தாலியைக் கணவர் வாழ்வதுவரைப் பெண்கள் அணிவது வழக்கம். புலிப்பல் கோர்க்கப்பட்ட மாலையை ஆண்களும், குழந்தைகளும் அணிந்து கொண்டனர். சில பெண்கள் மார்பில் தங்கத்தால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்து கொண்டனர். இவற்றில் வைரம், மாணிக்கம், ஆகிய கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. தங்கத்தால் செய்யப்பட்ட அரைஞான் அணிந்து கொண்டனர். பெண்கள் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப் பெற்ற சிலம்பு அணிந்து கொண்டதாக அகநானூறு கூறுகின்றது. பரியகம், பாடகம், சலங்கை அரியகம் ஆகியவை நடன மாந்தருக்குரிய அணிகலன்களாகும்.

ஆடவரும் அணிகலன்களில் பிரியம் வைத்தனர். அரசர்கள் அணிந்திருந்த அணிகலன்களில் விலையுயர்ந்த கற்கள் பதிக்க பெற்றிருந்தன. ஆண்கள் காதில் கடுக்கண் அணிந்தனர். ஆண்களும் கூடக் காப்பும் சிலம்பும் அணிந்திருந்தனர். குழந்தைகளுக்கும் இது போன்ற அணிகலன்களை அணிவித்து மகிழ்ந்தனர். கிண்கிணி, ஐம்படைத்தாலி என்பன குழந்தைகளுக்குரிய அணிகலன்களாகும். புலிப்பல் கோர்க்கப்பட்ட மாலைகளும், தங்கத்தாலான மாலை, காப்பு ஆகிய அணிகலன்களும் குழந்தைகளுக்கு அணிவிக்கப்பட்டன. அவர்களுக்கு தங்கக்காசுகள் கோர்க்கப்பட்ட இடுப்பு அணிகளும் இருந்தன. ஏழைக் குழந்தைகள் கிளிஞ்சலிலான ஆபரணங்களை அணிந்து கொண்டனர்.

மக்கள் கிராமங்களில் எளிய வாழ்க்கையை மேற்கொண்டனர். கிராமங்களில் பல்வேறு தொழில்களைச் செய்தோர் வாழ்ந்தாலும் அவர்கள் ஒன்றுபட்ட வாழ்க்கையை மேற்கொண்டனர். ஒவ்வொரு கிராமத்திலும் பொது விவகாரங்கள் பற்றி விவாதிப்பதற்குப் பொதியில் அல்லது மன்றம் என்றும் தனியிடம் இருந்தது. கிராமத்தின் வழக்குகள் இம்மன்றத்தில் அறச்செயல்கள் செய்யப்பட்டதால் அது அறம் வளர்க்கும் மன்றம் என்றும் அழைக்கப்பட்டது. முதியோர் மன்றத்தில் சூதாடியதற்குச் சான்றுகள் உள்ளன. இளைஞர்களும் இங்கு விளையாடினர். சில விழாக்களும் மன்றத்தில் நடைபெற்றன.

பெண்கள் பூண்ட அணிகலன்களின் வகைக்குக் கணக்கு காண முடிகிறது. நெற்றி, தோள் இடுப்பு, காது, கை, கால் விரல்கள் ஆகிய எல்லா உறுப்புகளிலும் அணிகலன்கள் அணிந்தனர். பெண்கள் வாசனைப் பொருள்களை நீரிற் கலந்து நீராடுவார்கள் கண்களுக்கு மை தீட்டிக் கொள்வார்கள். மார்பில் குங்குமம் சந்தனம் ஆகியவற்றை பூசிக்கொள்வார்கள் விரல்களில் செம்பஞ்சுக் குழம்பைக் குழைத்துப் பூசி அழகு செய்வர். பெண்டிர் மலர்களால் தம்மை அலங்கரித்துக் கொள்வர். குளித்து முடித்தவுடன் கூந்தலுக்கு நறுமணம் கூட்டுவார்கள். யானையின் தந்தத்தினால் சீப்புகள் செய்து தலைவாரிக் கொண்டனர். மக்களின் கலையார்வத்திற்கும் அழகுணர்ச்சிக்கும் அடையாளமாக விளங்குவது அவர் பூணும் அணிகலன்கள் தான். அவர் வாழும் சமுதாயத்தின் செயல்வ வளத்திற்கும அணிகளே சின்னமாக அமைகின்றன.

சோழப்பெருவேந்தர் காலச்சமுதாயத்தின் அணிகலன்கள் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டன. இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் இடம் பெற்றுள்ள எண்ணிலடங்காத் தங்க, வெள்ளி ஆபரணங்களும், விலைமதிக்க ஒண்ணா நவமணிகளும் முற்றும் இழைத்த அணிகலன்களும், அக்காலத்தில் பொற்கொல்லர்களின் கலை பெற்றிருந்த உயிரிய நிலையை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. மன்னரும் மக்களும், ஆண்களும் பெண்களும் அணிகலன்களை விரும்பிப் பூண்டனர். உடலின் எல்லாப் பகுதிகளிலும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அணிமணிகளைப் பூண்டிருந்தனர். பொன்செய் கொல்லர்கள் தட்டர் என்றும், கம்மிகள் என்றும், பொற்கொல்லர் என்றும் அழைக்கப்பட்டனர்.

**அரசு குடியினர் பூண்ட அணிகள்**

சோழப் பெருவேந்தர்கள் தம் அரச சின்னமாகப் பொன்னிலே நவமணி இழைத்த முடி அணிந்தனர். மலைமுகடு போன்ற உருவில் அமைந்த முடி மகுடம், அபிடேகம், மௌலி, மின் மணிமோலி என்ற பெயர்களிலும் அமைக்கப்பட்டது. பட்டம், கோடகம் போன்றவை மகுடத்தின் பகுதிகளாக அமைந்தன. சிந்தாமணியும் மன்னர் மகுடத்தை அலங்கரித்த அணிகலன்களாகும்.

மகரக்குழை, மரகதக்குழை, கன்னவதங்குசம் போன்றவை அம்மன்னர் தம் திருச்செவிகளை அலங்கரித்த அணிகலன்களாகும். மன்னர்களின் வெற்றி தரும் வீரத் தோள்களைத் தோள் கொடி அலங்கரித்தது. மேலும் பாம்பு வடிவில் அமைக்கப்பட்ட சுரளகத்தோள் வளையம் முத்தால் ஆன தரளத்தொடி ஆகியவையும் மன்னர் பூண்டதோள் அணிகலன்களாக விளங்கின. கூடர்மணிக்கேயூரம், பணிவலையம், வாகுலையம், கடகம், மணிக்கடகம் போன்றவை அவர் கைகளை

அலங்கரித்தன. குறிப்பாக முத்துக்களால் ஆன முத்துத்தாமரம் திரள் மணிவடம், திருமாலை, மாணிக்க ஆரம் போன்ற அணிகலன்களை அம்மன்னர்கள் தம் கழுத்தில் ஆரமாகப் பூண்டிருந்தனர். **"முந்நீர் கொடுத்த வயங்கு மணி"** என்று போற்றப்படும் 'கவுத்துவமணி', 'மணிக்காப்பு', 'பெரும்போதி', போன்ற பொன்னாபரணங்கள் அவர்கள் மார்பினை அணி செய்தன. இடையில் அவர்கள் உதரபந்தனம் என்ற அணிகலனை அணிந்தனர். பொற்கழலும் கட்டுவடமும் அவர்களின் கால்களை அலங்கரித்தன.

அரசியரும் மணிமுடி அணிந்தனர். 'தெய்வ உக்தி', 'பொற்பூ' போன்ற தலையணிகளையும், நெற்றில் சூட்டும் 'சுட்டி' போன்றவற்றையும் அணிந்தனர். அவர் காதுகளை மகரக்குழை அலங்கரித்தன. முத்துமாலை, பிறைவடம், நட்சத்திரமணிமாலை, வலம்புரிமுத்து வடம், நிரைத்தாலி, தாலிமணிவடம் ஆகிய அணிகளைக் கழுத்தில் ஆரமாகத் தாங்கினர். சுறாமீன் வடிவமான தோளணி, மகரமீன் வடிவிலான குறங்குச்செறி, மணிகோத்த மேகலை, கிண்கிணிபாடகம், சிலம்பு, பரிபுரம் போன்றவை அரசியர்களை அணி செய்தன.

### மக்கள் பூண்ட அணிகலன்கள்

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும், ஆண்களும் பெண்களும் அவரவர் நிலைக்கேற்ப அணிகலன் பல அணிந்திருந்தனர். வெள்ளியாலும் பொன்னாலும் உருவாக்கப்பட்ட ஆபரணங்களில் முத்து, பவளம் முதலிய மணிகள் இழைக்கப்பட்டிருந்தன. இப்பணியைச் செய்த கைவினைஞர் 'தய்யான்' எனவும் அழைக்கப்பட்டார்.

### தலையணிகள்

சொரிமுத்தின் கொண்டை என்ற முத்தாபரணம் தலைமுடியை அலங்கரித்தது. சிலைதலைக்கோலம், உத்தி, தெய்வஉத்தி விழுகமலைக்கோலம், சீதேவி என்று பல பெயர்களால் வழங்கப்பட்ட பொற்பூ தலை அணிகளில் சிறந்ததாக விளங்கியது. பருமுத்துக்கோவை, தலைப்பாவைப் பிறை, திருப்பிறை, வலம்புரி முத்தின் வடம், அச்சிராபுரணம், முடிமணி, சூராமணி, இராசாவர்த்தம் திருக்களாவம், திருமகரம், முத்தின் சிடுக்கு ஆகியனவும் தலையணிகளாக விளங்கின.

### காதணிகள்

காதுமடல்கள் துயைிடப்பட்டுப் பல்வகை அணிகளால் அலங்கரிக்கப்பட்டன. குழை என அழைக்கப்பட்ட காதணி பல வடிவங்களில் அமைந்திருந்தது. மகரமீன் வடிவில் அமைந்தது. மகரக்குழை, திருமகரம், திருக்குதம்பை, தோடு, வடுகவாளி, கொப்பு, தூக்கம், மகரக்குண்டலம், கம்பை, முத்து மத்திரை செவிமாலி போன்ற காதணிகளையும் மக்கள் பூண்டிருந்தனர் என்பதற்கு இலக்கியங்களும் கல்வெட்டுகளும் சான்று கூறுகின்றன.

### கழுத்தணிகள்

மணி வடங்களும், பொன் அணிகளும் கழுத்தை அலங்கரித்தன. முத்துச்சரமான முத்துத்தாமம், நீலரத்னாபாரணம், சங்கமாணிக்கம், பொற்காசுகளால் ஆன காசுமாலை, காரை கணவயிரக்காரை, கண்டநான், புல்லிலைக் கண்டநாண், பாசாமாலை, கண்டத்துடர், புறத்துடர், திரள் மணிவடம், தாலிமணிவடம், பஞ்சகரி, ஏகாவல்லி, சப்தகரி, திருதிரிசரம், பதக்கம், மாங்காய்நாண், கொடி, திருவாரம், மணிக்கம்பை, முத்துவடம், பவளவடம், வண்ணசரங்கள், பட்டைக்காரை, ஐம்படைத்தாலி, அச்சுத்தாலி, அமைத்தாலி, வரிவெண்தாலி, சிறுமணித்தாலி போன்றவை அன்று மக்கள் பூண்டிருந்த கழுத்தணிகளாக விளங்கின.

### தோளணிகள்

மக்கள் பெரிதும் விரும்பி அணிந்த தோணியாகத் தோள்களே விளங்கியது. சுருண்ட பாம்பின் வடிவிலான பாப்புச்சுருள், பணிவளையம், தோட்சுட்டிகை, நவரத்தினத் தோள்வளை, இருதொடித்தோள், நித்தவத்தின் அம்பொற்றொடித்தோள், வாகுலையம், அரதனக்கடகம், பவழக்கடகம், வயிரசாலயம், கைக்கடகம் போன்றவை அக்காலத் தோளணிகளாக விளங்கின.

### மணிக்கச்சுகள்

மகளிர் பொன்னாலும், மணிகளாலும், முத்தாலும் ஆன கச்சுகளை அணிந்தன. முத்தினகச்சு, பொலன்கச்சு, மாணிக்கச்சு என்று அவை வழங்கப்பட்டன.

### கைவளைகள்

தொடியும் வளையும் கைகளை அலங்கரித்த அணிகலன்களாக விளங்கின. செம்பொற்றொடி, பொலன்றொடி, முத்தின் சூழ்தொடி குறுந்தொடி எனப்

வாகுவலையம், திருக்கைக்கரை, கடகம், பொட்டு திருக்கைப் பொட்டு, இரத்தினக்கடகம், பவளக்கடகம், முத்தின் கடகம் போன்ற பிற அணிகலன்களும் கைகளை அழகுபடுத்தின.

**காலணிகள்**

திருவடிக்காரை, சிலம்பு, பரிபுரம், நூபுரம், கிம்புரிச் சிலம்பு, சச்சை, சதங்கை, திருக்கால் மோதிரம், வட்டப்பு, வீரக்கழல் போன்ற அணிகலன்கள் காலணிகளாக விளங்கின.

இவை தவிர இன்ன பகுதியில் அணியத்தக்கன என அறிய இயலாத பல அணிகலன்களின் பெயர்கள் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன. மதாணி, சில்லணி, உச்சிக்கலணணி, திவ்யாபரணம், கொத்தாபரணம், பேரணி கிங்கிணிப் பெருநாள், சோகைச் சிருக்கின் கூடு தவணைக் கிங்கிணி போன்ற பல அணிகலன்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. மூக்கை அழகு செய்யும் அணிகலன் எதுவும் இன்று இருந்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

தங்கம், விலைமதிக்க முடியாத கற்கள் நவமணிகள் ஆகியவற்றைக் கொண்டு வகை வகையான நகைகளும் அணிகலன்களும் செய்யப்பட்டன. இவை ஒவ்வொன்றிலும் கற்களும், பவழங்களும் இணைக்கப்பட்டிருந்தன. கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் குறிப்பிட்ட பல நகைகள் இப்போது புழக்கத்தில் இல்லை. படையெடுப்புக்களாலும், போர்களாலும் பழைய நகைகள் அழிந்துவிட்டன. சோழர்கள் காலத்தில் பொற்கொல்லர்களின் கலை, ஈடும் இணையுமில்லாத பீடு நிலையை அடைந்திருந்தது என்பதையும், விலைமதிக்க இரத்தினங்கள் பவளங்கள் ஆகியவற்றைப் பற்றி நன்கு தெரிந்தது அவற்றின் நிறங்கள், தன்மைகளுக்க ஏற்பப் பொருத்தமான இணைத்துக் கவர்ச்சியும் மகிழ்ச்சியும் தரத்தக்க அணிகலன்களைத் தஞ்சாவூர் பொற்கொல்லர்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. கோயில்களைப் பற்றி முன்னுரையாகச் சில முக்கியமான செய்திகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பல்வகைத் தொடிகள் அணி செய்தன. வரிவளை, கோல்வளை எனப் பெயர் பெற்ற வளைகள், சூடகம் போன்ற அணிகலன்கள் கைகளை அலங்கரித்தன.

முதலாவதாக, கோயில்கள் என்பவை அரண்மனையைவிடப் புகழ்பெற்ற அரண்மனைகள் அரசர்களுக்கு அரண்மனையில் செய்யப்பெற்ற மரியாதைகள் (ராஜோபசாரங்கள்), கோயில்களில் கடவுள்களுக்குச் செய்யப்பட்டன. குடிமக்கள், தங்கள் அரசர்களையே முன் மாதிரியாகக் கொண்டு அன்றாட வாழ்வில் அரசர்களுடைய பழக்க வழக்க ஒழுக்கங்களையும் நடையுடை பாவனை முதலியவற்றையும் பின்பற்ற முயன்றார்கள். மற்ற கோயில்களை விடத் தஞ்சாவூர்க் கோயில், அளவில் பெரியது. அதில் எஞ்சியுள்ளவை இதைத் தெரிவிக்கின்றன. எனவே, நகைகளாய் இருந்த செல்வத்தின் மதிப்பையும் பொற்கொல்லர் வணிகம் வளமுடன் திகழ்ந்ததையும், மிகைபடர் கூறப்பட்டிருப்பதைக் கருதாமல், நாம் அப்படியே ஒப்புக் கொள்ளலாம். சோழ வம்சத்தினர் பயன்படுத்திய ஆபரணங்கள் மற்றும் அதனுடைய வேலைப்பாடு மிகுந்த கலைத்திறனையும் பார்க்கும் போது அவர்களுடைய வாழ்வியல் நிலை மேலோங்கி இருந்ததை அறிய முடிகிறது.

**துணை நூல்கள்**


1. பிள்ளை, கே.கே., சோழர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.
2. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு (சோழப்பெருவேந்தர் காலம்), நான்காம் தொகுதி, (இரண்டாம் பகுதி), தமிழ் வளர்ச்சி இயக்கம், சென்னை.
3. கே.நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள் (தொகுதி-2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1989.
4. வே.தி.செல்லம், தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1985.
5. பண்டித வித்துவான் நீலசேகரன், சோழர் வரலாறு, ஸ்ரீசத்தியசாமி அச்சகம், நாமக்கல், 1970.
6. க.த.திருநாவுக்கரசு, முதலாம் இராசராச சோழன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1975.
7. தி.வை.சதாசிவ பண்டராதித்தார், பிற்காலசோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1957.
8. அ.இராகவன், தமிழ்நாட்டு அணிகலன்கள், கலை நூற்பதிப்பகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, 1970.

9. க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை

*****